# ஐங்குறுநூறு பாடலில் பரத்தையரின் ஆளுமை

முனைவர். க. தனலெட்சுமி,

*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை (சுயநிதி)*
*நா.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை – 625019*

**முன்னுரை**

ஆளுமை என்பதற்குரிய ‘பெர்சனாலிட்டி’(Personality) என்ற ஆங்கிலச்சொல் (Persona) பெர்சனா என்னும் இலத்தீன் சொல்லிருந்து பிறந்தாகும். இச்சொல்லின் பொருள், அக்காலத்திலிருந்த நாடக நடிகர்கள் தாங்கள் இன்னார் என அடையாளம் தெரியாமலிருக்க அவர்களின் முகத்தை மறைக்கப்பயன்படுத்திய முகமூடி (Mask) என்பதாகும். ஒரு மனிதனின் அகம் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளையும், புறம் சார்ந்த நாகரிகக் கூறுகளையும் வெளிப்படுத்தி அவன் நடத்தையின் செயல்பாடாகவே இலக்கியங்கள் ஆளுமையை வரையறை செய்துள்ளன. பரத்தையர் இற் பரத்தை அல்லது காமக் கிழத்தியர் எனவும் சேரிப் பரத்தை அல்லது நயப்புப் பரத்தை எனவும் இரு வகைப்படுவர் என்பதை உரையாசிரியர் குறிப்புகளால் அறியலாம்.காமக்கிழத்தி, காதற்பரத்தை, சேரிப்பரத்தை, நயப்புப்பரத்தை, இற்பரத்தை, இல்லிடப்பரத்தை முதலான பரத்தையர் குறித்த பல்வேறு பெயர்கள் அகப்பாடல்களில் அடிக்குறிப்பில் அதாவது திணைத்துறைக் குறிப்புகளில் காணப்பெறுகின்றன. இப்பெயர்களுள் ஒன்றேனும் மூலப்பாடல்களில் காணப்பெற்றிலது என்பது குறிப்பிடத்தக்கது”[1] என்கிறார். சிலம்பு நா. செல்வராசு,இற்பரத்தையாக விளங்குபவர் தலைவன் ஒருவனுக்கே அன்பு பூண்டு ஒழுகுபவளாகவும், சேரி பரத்தையர் பலரிடம் அன்பு கொள்பவளாகவும் விளங்குகின்றனர். குலமகள் என வகைப்படுத்தப்பட்ட பெண்ணுக்கு எதிரானதாக பரத்தமை ஒழுக்கம் திகழ்ந்தது.ஐங்குறுநூறு பாடலில் பரத்தையின் ஆளுமையினை காணலாம்.

**ஆளுமைக் குறைபாடுடைய பரத்தை**

ஐங்குநுறூறு பாடல்கள் மூன்று அடிச்சிறிய அளவிலும் ஆறு அடிப் பெரிய அளவிலுமாக ஐந்நூறு பாடல்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு திணைக்கும் நூறு நூறு பாடல்கள் உள்ளன.இந்நூலைத் தொகுப்பித்தவன் யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, இவன் சேர அரசன் இதனைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார். ஐங்குறுநூறு பாடலில் பரத்தை கூற்று – 13 பாடல்கள், காதற்பரத்தை கூற்று – 6 பாடல்கள் உள்ளன.

தலைவன் தலைவிக்கு இடையே ஊடல் வருவதற்கு காரணமாக இருப்பவள் பரத்தையே ஆவாள்.**“**பரத்தை, காமக்கிழத்தி எனத் தொல்காப்பியர் சுட்டும் பெண்ணை ஊரள், பெண்டிர், மங்கை, மகளிர், அரிவை என்ற பொதுப் பெயராலும் ஒருத்தி, ஏதிலள், பிறள், பரத்தை, கொண்டி மகளிர், விலைக் கணிகை, கணிகை, எனவும் பழந்தமிழ் இலக்கியம் குறிப்பிடுகிறது**”**[2]

ஆளுமைப் பண்புகள் எல்லோருக்கும் உண்டு ஒவ்வொருவருடைய பழக்கவழக்கங்களில் அந்த பண்புகள் வெவ்வேறு அளவில் வெளிப்படும் அதாவது. ஆளுமைப் பண்புகள் எல்லோரிடமும் உண்டு ஆனால் அவற்றின் அளவு மிகவும் அதிகமாகி விட்டாலோ, தீவிரமாகிவிட்டாலோ பிரச்சனைகள் தொடங்குகின்றன.இயற்கையான விஷயங்கள் மற்றும் வளர்ப்பு விஷயங்கள் (அனுபங்கள் மற்றும் சுற்றுச்சூழல்) ஆகியவற்றின் கூட்டணிதான் ஒருவருடைய ஆளுமைப் பண்புகளைச் செதுக்கிறது.தலைவனுடன் உறவுகொண்ட பரத்தை அவன் தன்னை விட்டு நீங்கி தலைவியிடம் சென்றாலும் வேறு பெண்களை நாடினாலும் சினங் கொள்வாள். அதன் காரணமாக அவனும் அவனுக்கு நெருக்கமானவர்களும் கேட்கும்படி தன் ஆத்திரத்தையும் வருத்தத்தையும் வெளிப்படுத்துவாள்

**“அன்னது ஆகலும் அறியாள்**

**எம்மொடு புலக்கும்அவன் புதல்வன் தாயே”(ஐங்குறு. 90)**

என்ற பாடலில் வண்டுகள் பல மலா்களில் பறந்து சென்று தேனை உண்டது மரபு. தலைவனும் அது போன்று பல பரத்தையரிடமும் இணைந்து மகிழ்கிறான். தலைவனின் புதல்வனின் தாயாகிய தலைவி எம்முடன் சண்டையிடுகிறாள் என்கிறாள் பரத்தை. மேலும் பரத்தை தலைவனை மயக்கித் தன்பால் இருக்கும்படி செய்து விட்டு அதில் விருப்பமில்லாதவள் போல் நடிக்கிறாள் என்று தலைவி புறங்கூறியதை அறிந்த பரத்தை இனி அவ்வாறே செய்யப் போவதாகத் தலைவிக்கு பாங்காயினா் கேட்க தலைவனிடம் கூறுகின்றாள். **(ஐங். 87)**ஆளுமை குறைபாடு கொண்ட ஒருவன் பிறருடன் பழக இயலாமல் சிரமப்பட்டு அல்லது ஒரு புதிய சூழ்நிலையில் தன்னைப் பொருத்திக் கொள்ள இயலாமல் திணறலாம். எதுசரி எதுதவறு, ஒவ்வொரு விஷயத்தையும் எப்படிச் செய்ய வேண்டும் என்பதை பற்றி இவா்களுக்குச் சில உறுதியான சிந்தனைகள் இருக்கக்கூடும். இந்த சிரமங்கள் காரணமாக இவா்கள் ஒரு பயனுள்ள வாழ்க்கையை வாழ இயலாமல் தடுமாறுகிறாா்கள். தன்னை விட்டு தலைவன் சென்றதால் பரத்தையின் தடுமாற்றம் வெளிப்பட்டு தலைவியின் செயலை பழிக்கின்றாள். இதனை தொல்காப்பியத்தில் தலைவியிடம் தலைவனை பிரித்துக் கைக்கொள்வேன் என சூளுரைக்கின்றாள்.

**“புல்லுதன் மயக்கும் புலவிக் கண்ணும்**

**இல்லோா் செய்வினை யிகழ்ச்சிக் கண்ணும்” (தொல். பொருள். 151)**

என்கிறது தொல்காப்பியம்.தலைவி பற்றி எதிர்மறையான கருத்தைக் கொண்டுள்ள பரத்தைக்குத் தலைவியை எதிரியாகக் காணும் மனநிலை இருப்பது புலப்படுகிறது.தனிமனிதனின் சமூகச் செயல்களில் மிகுந்த அளவில் சிதைவினை ஏற்படுத்தும் நடத்தைக் கூறுகள் ஆளுமைக் கோளாறுகளாகின்றன.

**பரத்தையின் கருத்துத்துணிவு ஆளுமை**

தலைவியைப் போன்று பரத்தையும் தலைவன் மீதும் தலைவி மீதும் பகைமையும் ஆத்திரமும் கொள்வதை அகப் பாடல்கள் காட்டுகின்றன.தன்னிடம் வந்த தலைவனும் தனக்குக் கிடைத்த வாழ்வும் கை நழுவி விடக் கூடாதே என்ற அச்சம் காரணமாக அவளது ஆத்திரம் வெளிப்படுகிறது. தலைவி மீதான ஆத்திரத்தால் கோபம் கொண்ட பரத்தை தலைவனைப் பழித்துப் பேசுகிறாள். தலைவன் புதிய பரத்தையிடம் சென்றுவிடும் சூழலில் அந்தப் பரத்தையைப் பழிவாங்கும் உணர்ச்சியும் முதல் பரத்தையிடம் ஏற்படுவதால் தன்னை உயர்த்தியும் அவளை இழிவுபடுத்தியும் பேசுவதை பரத்தையின் ஆளுமை எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை காணலாம்.

**தலைவன் மீது பரத்தையின் கோபம்**

தலைவன் பரத்தையின் அழகு நலன்களை நன்கு இன்பமுற அனுபவித்துத் தலைவியிடம் சென்றான். அப்போது பரத்தை அவன் பிரிந்த போதும் பிரியாநிலையில் இருக்கின்றான் என்கிறாள். அவன் இப்பொழுது பிரிந்து சென்றாலும் இமைப் பொழுதில் இங்கு மீண்டும் வருவான். உள்ளத்தால் பிரியவில்லை என்கிறாள் பரத்தை, இதனை

**“……….ஊரன்**
**வேம்முலை அடைய முயங்கி நம்வயின்**
**திருந்து இழைப் பணைத் தோள்நெகிழ**
**பிரிந்தனன் ஆயினும் பிரியவன் மன்னே” (ஐங். 39)**

என்னும் பாடல்வரியால் அறியலாம். இங்கு பரத்தை தலைவனை நினைத்து வருகைக்காக காத்திருக்கிறாள். பரத்தையிடம் இருந்து மீண்டும் தலைவன் தலைவியிடம் சேர்ந்து இனிநான் உன்னைவிட்டுப் பிரியேன் எனக் கூறியதை, தலைவியின் தோழியர்களிடம் கேட்டு அறிந்து தலைவனை பழிக்கிறாள் பரத்தை. இங்கு பரத்தை நடத்தையால் மாறுபாடு உடையவளாய் காணப்படுகின்றாள். தலைவன் சூள் பொய்க்கும் தன்மை உடையவன் என்று அவளின் தோழியிடத்துக் கூறுகிறாள்.

**“அம்மவாழி தோழி மகிழ்நன்”**(ஐங். 37)

என்ற பாடலில் பரத்தை தலைவன் தன்னிடம் கூறிய வார்த்தைகளை மறந்தவன், கள்வன் (பொய்த்தவன்) என்கிறாள். தலைவனைத் திட்டும் உரிமையைப் பெற்றவளாய் பரத்தை காணப்படுகிறாள். அவன் என்னிடம் மட்டும் உறுதி மொழியைப் பொய்பித்தவன் அல்ல, தலைவியிடமும் ஏமாற்றி வருந்தச் செய்யும் செயலை உடையவனாவான் என்கிறாள் பரத்தை. தலைவனது குற்றத்தை பேசுகிறாள். இங்கு பரத்தையின் கோபம் வெளிப்படுகிறது. இதே போன்று தன்னிடம் இன்பம் கொண்ட தலைவன் தன்னை விடுத்து மீண்டும் தலைவியிடம் சென்றது கண்டு தலைவனை இகழ்ந்து உரைக்கிறாள். பரத்தை தனக்குப் பாதுகாப்பாளனாக உணர்ந்த தலைவன் தன்னைப் பிரிந்துவிடுவானோ என்ற அச்சம் கொள்வாள். அந்த அச்சமும் பதட்டமும் ஆத்திரமும் காரணமாகத் தலைவனைத் தனதாக்கிக் கொள்வேன் எனச் சவால் விடுவாள், தலைவியின் பாங்காயினார்க் கேட்கவும், பிற பரத்தையிடமும், தனது தோழியிடமும் சூளுரைப்பது என்ற வகையில் பரத்தை செயல்படுவாள்.

தன்வழிப்பாட்டு ஆளுமை என்பது தன்னம்பிக்கை கொண்டவர். தன்னையே நேசிக்கும் பண்புடையவர்கள் மற்றவர்களின் உணர்ச்சிகளையும் இன்ப துன்பங்களையும் விருப்ப வெறுப்புகளையும் இவர்கள் கண்டு கொள்ள மாட்டார்கள். தன்வழிப்பாட்டு ஆளுமையின் வெளிப்பாடாக பரத்தை ஐங்குறுநூறு பாடல் ஒன்றில் தனது ஆளுமையை கொண்டுள்ளான். பரத்தையிடமிருந்து தலைவன் தன்மனைக்குச் சென்று, சில நாட்கள் வரவில்லை. இதனைக் கண்ட பரத்தையர்கள் தலைவன் இனி வரமாட்டான் என்று கூறியதால்,தலைவன் வருவான், மீண்டும் தன் மனையை நாடிவருமாறு செய்யும் அழகும் பெண்மை நலமும் தன்னிடம் உண்டு என்கிறாள் ஒரு பரத்தை இக்கருத்தை,

**‘‘அம்மவாழி தோழி மகிழ்நன்**
**ஒண்நொடி முன்கை யாம் அழப்பிரிந்துதன்**
**பெண்டிர் ஊர்இறை கொண்டனன் என்ப**
**கொண்டை பாய்தர அவிழ்ந்த**
**வண்டுபிணி ஆம்பல் நாடுகிழவோனே’’** (ஐங். 40)

என்ற பாடல் வழி அறியமுடிகிறது. தலைவன் தன் இளம் புதல்வன் சொல்லிய சொற்களைத் தன் பாங்காயினர் கூறக்கேட்டு மகிழ்ந்தான் என அறிந்த பரத்தை ‘‘தலைவனே இனி நீ என்னோடு சேர்ந்து வாழ்வது அரிது, எனவே உன் மனைவியோடு சேர்ந்து வாழ்வாயாக’’ என்று கூறுகிறாள். ஒரு பக்கம் கோபம் பட்டாலும் மறுப்பக்கம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை காணலாம். மனநோய் அறிகுறி ஏதுமில்லாமல் நம்பிக்கையின்மை, சந்தேகம், தனிமை, விரும்புதல், கோபப்படுதல், பிறர் குற்றம் பேசுதல், தன் குற்றத்தை ஒப்புக் கொள்ளாதது, மனவேதனையடைதல், துன்பம் கொள்ளுதல், தன் குடும்பத்தினர் தனக்கு எதிராகச் சதிசெய்வதாக நினைத்தல் ஆகியவை ஆளுமையில் அடங்குகின்றன.

**முடிவுரை**

ஐங்குநுறூறு பாடலில் பரத்தையின் ஆளுமையானது தலைவன் தன்னை விட்டு சென்றதால் தலைவியை பழிக்கும் போது ஆளுமை மாறுபாடு அடைவதை காணமுடிகிறது. மேலும் தலைவனை பழித்து பேசும் சூழலில் மீண்டும் தலைவன் தன்னிடம் வருவான் என்று நம்பிக்கை கொண்டவளாய் உள்ளாள். தலைவனை தலைவியிடம் அனுப்பும் போது பெருந்தன்மை உடையவளாய் காணப்படுகின்றாள்.தன்வழிப்பாட்டு ஆளுமை,கருத்துத்துணிவு ஆளுமைபோன்றவை பரத்தையிடம் வெளிப்படுவதை காணமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

[1] சங்க இலக்கிய மறுவாசிப்பு, சமூகவியல் மானிடவியல் ஆய்வுகள் ப. 169

[2] ஐ.இராமராசா, தமிழ் இலக்கியத்தில் ஊடல், பக்.185-186